ஈழத்துக் கவிஞர் லதாவிற்கு சிங்கப்பூரின் இலக்கிய விருது

கோபி
(ஒரு பேப்பர்)

சிங்கப்பூர் அரசு ஆண்டுதோறும் வழங்கிவரும் இலக்கிய விருது ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து அங்கு வாழும் ஊடகவியலாளர் கனகலதா கிருஸ்ணசாமி ஐயருக்கு, வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் தேசிய மொழிகளான சீனம், மலே, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் வெளிவந்த படைப்பிலக்கியங்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. காலச்சுவடு சஞ்சிகை நிறுவனத்தின் வெளியீடாக வெளிவந்த லதாவின் 'நான் கொலை செய்யும் பெண்கள்' என்ற சிறுகதைத் தொகுதிக்காக இவ்வருடத்திற்கான தமிழ் இலக்கிய விருதுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லதா கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் தமிழ் முரசு பத்திரிகையில் செய்தியாசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். அவர் தமிழ் முரசு பத்திரிகையிலும், தமிழகத்து இலக்கியச் சஞ்சிகைகளான காலச்சுவடு, கணையாழி போன்றவற்றிலும் கவிதைகளையும், சிறுகதைகளையும் எழுதி வருகிறார். கொழும்பிலிருந்து வெளிவந்த சரிநிகர் சஞ்சிகையிலும் அவரது ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. லதாவின் முதலாவது கவிதைத் தொகுதி 'தீவெளி' 2003ல் வெளிவந்தது. இக்கவிதைத் தொகுப்பு தமிழ்நாடு பெரியார் பல்கலைக்கழகத்தில் கலை இளமானி (BA) பட்டப்படிப்பிற்கான ஒரு பாடநூலாக உள்ளது.லதாவின் இரண்டாவது கவிதைத்தொகுதி 'பாம்புக்காட்டில் ஒரு தாழை' 2004ல் வெளியிடப்பட்டது.

இப்போது விருது பெற்றுள்ள 'நான் கொலை செய்யும் பெண்கள்' சிறுகதைத் தொகுதி சிங்கப்பூர் தமிழ் சமூகத்தில் பெண்களின் நிலைபற்றிய கவலைதரும் விடயங்களை உள்ளடக்கிய அழகான கதைகளைக் கொண்டுள்ளதாக இவ்விருதினை வழங்கும் அமைப்பு வெளியிட்டிருக்கும் பத்திரிகைக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் பல்கலாச்சரத்தளத்தில், சிறுபான்மை தமிழ்ச்சமூகத்திலுள்ள ஆணாதிக்க முறைமை அங்கு பால் ரீதியாக இரண்டாந்தரத்துக்கு தள்ளப்பட்டுள்ள பெண்களின் மீது செலுத்தப்படும் அடக்குமுறை, பெண்கள்படும் அவதி போன்றவை இவரது சிறுகதைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பெண்மை, உறவுச்சிக்கல்கள், குடும்ப அழுத்தங்கள், உளவியல் தாக்கங்கள், என்பன கதைகளின் மையப்பொருளாக அமைந்துள்ளன என அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பேப்பர் சார்பாக எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதற்காக லதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, அவர் தெரிவித்த சில கருத்துக்களை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

உங்களது ஆக்கங்களின் தலைப்புக்களைப் பார்த்தால் அவை சிங்கப்பூரின் மாநகர வாழ்க்கைக்கு ஏற்றதாகத் தெரியவில்லை. அப்படியானால் அவை வேறு அநுபவங்களின் பிரதிபலிப்புகளாக அமைந்துள்ளனவா?

நான் பிறந்து வளர்ந்தது இலங்கையில், அதுபோல் எனது அப்பா, அம்மா இந்தியாவில் இருக்கிறார்கள். அங்கு அடிக்கடி போய்வருகிறேன். அந்த அநுபவங்களும் இருக்கின்றன. ஆனால் சிங்கப்பூரில் நகரமயப்பட்ட வாழ்க்கையாக இருந்தாலும், அதுக்குள்ளும் பெரிய வாழ்க்கை அமைந்துள்ளது அவற்றைபற்றி எழுதுவதற்கும் நிரம்ப விடயமிருக்கிறது. எனது சிறுகதைகளைப் பார்த்தால் உலகளாவிய கருத்துக்கள்தான் இருக்கும். ஏனெனில் இந்த வாழ்க்கைச் சூழல் அப்படித்தானிருக்கிறது. அதுபோல் எனது கவிதைகள் எல்லாம் சிங்கப்பூர் வாழ்க்கை முறையைச் சார்ந்ததாகவே இருக்கின்றன.

கதை, கவிதை எழுத வேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?

ஆர்வம் என்றில்லை. நிறைய விடயங்கள் நடக்கிறது. ஒரு செய்தியாளராய் அவை எல்லாவற்றை பற்றியும் செய்தி எழுத முடியாது. சிலவற்றை கதை கட்டுரை மூலம் வெளிக்கொணர்கிறேன். நிறைய விடயங்களை அவதானிக்கிறேன். சில விடயங்களை எழுதவேண்டும் எனத் தோன்றும் போது எழுதுகிறேன்.

சிங்கப்பூரில் வாழ்வதனால் எழுதுவதற்குரிய முழுச் சுதந்திரமும் இல்லை என்று கருதுகிறீர்களா?

அப்படி எதுவுமில்லை. அரசு, படைப்பாளிகளை ஊக்கப் படுத்துகிறது. தேசிய கலைகள் மன்றம், தேசிய புத்தக மேம்பாட்டு மன்றம் என்பனவற்றின் மூலம் இங்குள்ள நான்கு மொழிகளிலும் உள்ள படைப்பாளிக்களை ஊக்குவித்து வருகிறார்கள். இரண்டாண்டுக்கு ஒருமுறை சிறுகதைப் போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்குகிறார்கள். கல்லூரி மட்டத்திலும் சிறுகதைப் போட்டிகளை நடாத்தி மாணவர்களையும் ஊக்கப்படுத்துகிறார்கள். இங்குள்ள பிரச்சனை என்னவெனில், புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கான செலவு அதிகம், படிப்பதற்கு என பெரிய வாசகர்தளம் என்று ஒன்று இங்கில்லை. பரந்த வாசிப்பு என்பது வெகுகுறைவாகவே உள்ளது. மற்றும்படி தடைகள் என்று ஒன்றும் இல்லை. ஆனால் சுயகட்டுப்பாடு இருக்கிறது. இளங்கோவன் போன்ற சிலர், அரசியல் உட்பட பல விடயங்கள் சார்ந்த பிரச்சனைகளைப் பற்றி வெளிப்படையான கருத்துக்களைக் கொண்ட நாடகங்களை நடாத்தி வருகின்றனர்

இங்கு படைப்பாளிகளுக்கு அரசாங்க ஆதரவு இருக்கிறது. ஆனால் படைப்பாற்றலை வளர்ப்பதற்கான ஒரு சூழல் இல்லை என்றே சொல்ல வேண்டும். வசதி வாய்ப்புகளை யாரும் சரியாகப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. பொதுவாக வாசிக்கின்ற பழக்கமும் இல்லை. அதனால் இலக்கியம் படைப்பதில் அவர்களுக்கு ஈடுபாடு இல்லை.

சிங்கப்பூரில் வாழ்ந்தாலும், உங்களை ஈழத்துப் பெண்ணாகவே நாங்கள் பார்க்கிறோம். நீங்கள் உங்களை எப்படி அடையாளப்படுத்துகிறீர்கள்?

ஈழத்தில்தான் எனது வேர்களிருக்கிறது. அதனை மறுக்கமுடியாது. தவிர நான் பிறந்தது, படித்தது எல்லாம் அங்குதான். நான் இங்கு வாழ்ந்தாலும் என்னை ஈழத்துப் பெண்ணாகப் பார்ப்பதில் எந்தத் தப்பும் இல்லை.

எமது உரையாடலின்போது, லதாவின் விருதுபெற்ற 'நான் கொல்லும் பெண்கள்' உட்பட அவரது அனைத்து நூல்களுக்குமான ஒவியங்களை கனடாவிலிருக்கும் எங்கள் தோழன் கருணா வரைந்ததாக நன்றியுடன் குறிப்பிட்டார்.

அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

கிறிஸ்மஸ்ஸும் கதிரவனும்

கிறிஸ்மஸ் என்றால் யேசுநாதர் பிறந்த நாள். இச்சமயப் பண்டிகையை திருப்பிறப்பு என்றும் அழைப்பார்கள், நத்தார் என்றும் அழைப்பார்கள். டிசெம்பர் 25இல்தான் பாலன் பிறந்தார் என்பதற்கு தகுந்த ஆதாரமில்லை. அதற்காக அது பற்றி சர்ச்சை கிளப்பி குழப்பாது அந்நாளை திருப்பிறப்பாக முழு உலகமுமே கொண்டாடுகிறது. நத்தாரின் வரலாறு பல சுவையான தகவல் தரவல்லது. பூமியின் வட கோளத்தில் வாழ்பவர்களே இப்படி ஒரு பண்டிகையை ஆரம்பித்தார்கள். தைப்பொங்கல் போல் ஏதோ ஒரு வகையில் கதிரவனுடன் தொடர்பு கொண்டே இப்பண்டிகையும் ஆரம்பமானது. 4,000 ஆண்டுகள் வரையிலான சரித்திரம் இதற்கு உண்டு.

ஜூன் மாதத்திலிருந்து குறைந்து கொண்டே வரும் பகல் நேரம் டிசெம்பர் 21ல் அதன் உச்ச நிலையை அடைந்து பின் நீண்டு கொண்டு போகும். இதை அவதானித்த ஐரோப்பியர்கள் பகல் நீள ஆரம்பிக்கும் அம்மாதத்தின் 21ம் திகதியை ஒட்டிய வாரத்தை ஒரு விழாவாகக் கொண்டாட ஆரம்பித்தார்கள்.

எந்தப் பெயரால் இது அழைக்கப் பட்டாலும் கதிரவனின் மறு பிறப்பை அல்லது அவன் புதிய உத்வேகம் பெறும் தன்மையை மையமாகக் கொண்ட விழாவாகவே இது கருதப் பட்டது. இதைவிட இந்தப் பண்டிகை மற்றைய எல்லாப் பண்டிகைகளையும் விட முக்கியத்துவம் பெற்றதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. விவசாயம் முக்கிய பங்கு வகித்த அந்நாளில், குறுகிய நாட்களாலும் குளிராலும், குறைவான வேலைப் பளுவே மக்களுக்கு இந்தக் காலத்தில் இருந்ததால் ஓய்வு நேரம் அவர்களுக்கு இருந்தது. அத்துடன் நாள் நீளப் போகின்றது என்பதால் மக்கள் மனதில் எழும் மகிழ்ச்சியும் இவ்விழாவிற்கான இன்னுமொரு உந்து சக்தியாக இருந்தது. பகற் காலம் நீள்வதை அடிப்படையாக வைத்து ஆரம்பமான ஒரு பண்டிகை இன்று நத்தாராக உரு மலர்ச்சி பெற்றுள்ளது

தென் கோளத்தில் இத்திகதியில் இருந்து பகல் நேரம் சுருங்க ஆரம்பிக்கின்றது. ஆனாலும் அவர்களுக்கும் ஒரு அனுகூலம் உண்டு. அவர்களின் கோடை கால உச்சத்தில் இப்பண்டிகை அமைவதால் அவர்கள் இதை ஒரு நீண்ட பகல் நேரம் கொண்ட காலத்தில் கோடை விழாவாகக் கொண்டாடலாம். இன்று ஓய்வு நேரங்களை நாங்களே திட்டமிட்டு ஒழுங்கு செய்யக்கூடிய சூழல் உலகில் நிலவுவதால் கோடையில் கொண்டாட வாய்ப்புப் பெற்ற தென் கோளத்தவர்களே கூடுதல் பயன் பெறுகிறார்கள்.

குறுகிய நாள் ஏற்படுவதை மேலோட்டமாகப் பார்ப்போம். ஒரு முறை கதிரவனை சுற்றி முடிக்க பூமிக்கு ஒரு ஆண்டு எடுக்கும். பூமி நேர் நிலையில் இல்லாமல் 23½ பாகை சரிந்துள்ள காரணத்தினால் உருவாகும் நிகழ்வு காரணமாக, டிசெம்பர் 21ல், 23½ பாகை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி கதிரவன் வர ஆரம்பிக்கின்றான். நிலத்தின் நடுக் கோடுவரை வந்து மேலும் வடக்கே 23½ பாகைவரை வந்து திரும்பவும் ஆண்டு முடிவில் புறப்பட்ட புள்ளியை சென்றடைகின்றான். அவனின் வடக்கு நோக்கிய பயணத்தை இந்தியாவில் உத்தராணய புண்ணிய காலம் என்பர். இங்கு அவனின் வடக்கு நோக்கிய பயணம் எளிதில் எவருக்கும் புரியக்கூடிய விதத்தில் நிகழ்வதால் நான் மேலே கூறியதுபோல் கதிரவனின் மறுபிறப்பாகக் கணிக்கப்பட்டு பெரு விழாவாகக் கொண்டாடப் பட்டு வந்தது.

கதிரவனின் இந்த மேல் கீழ் ஓட்டம் காரணமாக டிசெம்பர் 21ல் மகரக் கோட்டுக்கு மேலாக நிற்கும்போது அதிகம் குறைந்த நாளும் மார்ச் 21ல் நிலத்தின் நடுக் கோட்டுக்கு மேலாக நிற்கும்போது சமபகலிரவு நாளும் ஜூன் 21ல் கற்கடகக் கோட்டுக்கு மேலாக நிற்கும்போது அதிகம் கூடிய நாளும், செப்ரம்பர் 23ல் மீண்டும் நிலத்தின் நடுக் கோட்டுக்கு மேலாக நிற்கும்போது சமபகலிரவு நாளும் நிகழ்கிறது. கதிரவனின் மறு பிறப்பை மையமாக ஆரம்பித்த பண்டிகை இன்று திருப்பிறப்பாக உரு மலர்ச்சி பெற்றுள்ளது.

கதிரவனின் வடக்கு தெற்கு நோக்கிய பயணத்தின் அடிப்படையில்தான் பருவங்கள் அமைகின்றன. அவனின் வடக்கு நோக்கிய பயண ஆரம்பத்திற்கு முன்பாக வடகோள வெப்ப மண்டல நாடுகளில் நல்ல மழை பொழிவதால் பயிர் சாகுபடி செய்யப்பட்டு விளைச்சல் பெற ஆரம்பிக்கிறார்கள். அதனாற்றான் கதிரவனுக்கு நன்றி சொல்லும் தைப்பொங்கலும் வட பயணம் ஆரம்பித்த 30 நாட்களுள் நிகழ்கிறது.

INSIGHT SYSTEM

வெளிவந்து விட்டது. Life in the UK பாட வழிகாட்டி– அதன் தமிழ் மொழி பெயர்ப்பு மற்றும் 2000க்கும் மெற்பட்ட பயிற்சி வினாக்கள் அடங்கிய CDக்கள்.

- பிரஜாவுரிமை பெறுவதற்க்குரிய LIFE IN THE UK வகுப்புக்கள்
- கம்பியூட்டர் வகுப்புக்கள்
- ESOL ஆங்கில வகுப்புக்கள்

மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த செவை.

மேலும் Home Office விண்ணப்ப படிவங்;கள் பூர்த்தி செய்தல் மற்றும் அது சம்பந்தமான ஆலொசனைகள்.

பிறப்பு திருமண இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் செய்தல் பொன்ற செவைகளும் ஆரம்பம்..

தொடர்புகளுக்கு: 0790 88 66 300